287—

கைத்தறி விற்பனை நிலையம்

*52512—திருமதி த. இந்திராகாந்தி:

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதி, துறையூர் நகரத்தில் கைத்தறி விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களின் உரிமைகளைப் பொறுத்தவரையில், 'சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை' என்று உரைத்து, பார் போற்றும் நிலையைத் தமிழகத்தில் உருவாக்கிவரும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(அ) மற்றும் (ஆ) துறையூர் தொகுதி, துறையூர் நகரத்தில் கைத்தறி விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். துறையூர் தொகுதி, துறையூர் நகரில் கைத்தறி விற்பனை நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை. இருப்பினும் துறையூரில் நகராட்சி அல்லது அரசுக்குச் சொந்தமான கட்டடங்கள் ஏதேனும் குறைந்த வாடகைக்குக் கிடைக்கும்பட்சத்தில், கைத்தறி விற்பனை நிலையம் அமைப்பது தொடர்பாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

திருமதி த. இந்திராகாந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னைத் தமிழகத்தைக் கண்ணாகக் காக்க வந்த ஆண்டாளின் வடிவமாய், தாய்த் தமிழ் மண்ணைத் தழைத்தோங்க

வைத்த தாய்க்குலத்தின் தெய்வமாய், 518 ஆலயங்கள்தோறும் அன்னதானத் திட்டம், 10,000 சிறு, சிறு கோயில்களுக்கு ஐந்து வகை பூஜை சாமான்கள், 9,004 பணியாளர்களுக்குக் காலமுறை ஊதியம், இவையனைத்தும் இந்து சமய அறநிலையங்கள் துறையில் வழங்கிய அதிசயமே. (மேசையைத் தட்டும் ஒலி) பட்டு, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உச்ச வரம்பின்றி 15 சதவிகிதம் தள்ளுபடி வழங்கியும், கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு 10 சதவிகிதம் கூலி உயர்வு வழங்கியும், நெசவாளர்களைக் கண் இமைபோல் காத்து வருகின்ற காவல் தெய்வம், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகின்றேன்.

துறையூர் பகுதியில் சுமார் 10,000 நெசவாளர் குடும்பங்கள் உள்ளன. 450 உறுப்பினர்களைக் கொண்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அதில் 100 பேர் நெசவுத் தொழிலைச் செய்து வருகின்றனர். நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தியைச் சந்தைப்படுத்திடவும், கூட்டுறவு அமைப்பின்கீழ் இயங்கிவரும் கைத்தறிப் பிரிவின் உற்பத்தியை அதிகப்படுத்திடவும், பல்வேறு நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்து வருகின்றார்கள். அந்தத் திட்டத்தின் மூலமாக இப்பகுதியிலுள்ள நெசவாளர்களை ஊக்கப்படுத்தினால், நெசவுத் தொழிலைச் செய்ய அதிகப்படியான நெசவாளர்கள் முன்வருவார்கள். மேலும், நகராட்சிக்குச் சொந்தமான கட்டட வசதியும் அங்கு இருக்கின்றது. எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, அங்கே ஒரு கைத்தறி விற்பனை நிலையம் அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையூர் தொகுதியில் சுமார் 500 கைத்தறி நெசவாளர்கள் உள்ளனர். துறையூர் கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம் மற்றும் கோட்டாத்தூர் கைத்தறி நெசவாளர்

கூட்டுறவுச் சங்கம் என 2 சங்கங்கள் இயங்கி வருகின்றன. இச்சங்கங்களில் 365 நெசவாளர்கள் உறுப்பினர்களாக இருந்து கைத்தறிப் பொருட்களையும், துணி வகைகளையும் உற்பத்தி செய்து வருகின்றனர். அவர்களுக்கு பல்வேறு திட்டங்களின்கீழ் அரசு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நகராட்சியிலேயே தற்பொழுது குறைந்த வாடகைக்குக் கட்டடம் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துள்ளார்கள். ஏற்கெனவே, துறையூரில் கோ-ஆப்டெக்ஸ் மூலமாகக் கைத்தறி துணி வகைகள் விற்கக்கூடிய விற்பனை நிலையம் இருந்து வந்தது. அங்கு தொடர்ச்சியாக சரிவர விற்பனையாகாத காரணத்தினால், கடந்த ஆட்சிக் காலத்தில், 1997-லேயே அந்த நிலையம் மூடப்பட்டுவிட்டது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன தகவல்களை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவே அங்கே மீண்டும் விற்பனை நிலையம் அமைக்க விரைவாக ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.*

திருமதி த. இந்திராகாந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் நெசவாளர்கள் மட்டுமின்றி அனைத்துத் துறைகள்தோறும் பொது மக்களும் சிறப்பான முறையில் பயனடைந்து வருகின்றனர். அந்தவகையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் சென்று, என்னுடைய பகுதியில் வசிக்கின்ற நெசவாளர்களுக்கும் ஒரு கைத்தறி விற்பனை நிலையம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு அம்மா அவர்கள் நெசவாளர்களுக்கான பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் ஒதுக்கவிருக்கின்ற 10,000 வீடுகளில், அந்தப் பகுதியில் இருக்கின்ற நெசவாளர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் நெசவாளர்களின் நலனுக்காக ஒரே தவணையாக 260 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, அனைத்து நெசவாளர்களுக்கும் பசுமை வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் துறையூர் தொகுதியில், ஏழு பசுமை வீடுகளும், 18.20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 82 தொகுப்பு வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டு, அவர்களுக்கு வழங்கப்படும் நிலையில் இருக்கின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் கூடிய விரைவில் திறந்து வைக்கப்பட்டு, அவர்களுடைய பயன்பாட்டிற்குக் கொடுக்கப்படவிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், வயதடைந்த நெசவாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் ஓய்வூதியம் வழங்க ஆணையிட்டார்கள். அதனடிப்படையில், தற்போது 70 நெசவாளர்கள் பயனடைந்து வருகின்றனர். நெசவாளர்களுக்குக் கடன் அட்டை, மருத்துவச் சிகிச்சை அட்டை, விலையில்லா மின்சாரம் என பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அளித்து வருகின்றார்கள். அனைத்துத் திட்டங்களின்மூலம் நெசவாளர்கள் பயனடைந்து வருகின்றனர். இவைதவிர, அவர்களுக்கு ஏதாவது தேவை இருப்பின், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கும்பட்சத்தில், அவை அனைத்தும் உடனடியாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். மேலும், இத்திட்டங்களின் பயன்பாடுகள் எவருக்கேனும் இடைக்கவில்லையெனில், அதுவும் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய வகையில் ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 288, மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.